# பட்டினத்தார் பாடல்களில் திருவாசக நெறி

**'சித்தாந்தரத்தினம்' முனைவர் இராம. மோகன்**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை**
**கணேசர் கலை அறிவியல் கல்லூரி**
**மேலைச்சிவபுரி**

சைவ நெறி தழைந்தோங்க எட்டாம் நூற்றாண்டில் திருவாதவூரில் தோன்றிய மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் இறைவனைக் குருவாகக் கண்டு சிவஞானம் வரப்பெற்றார். திருவாதவூரில் இருந்து குதிரைகள் வாங்குவதற்காகத் திருப்பெருந்துறைக்கு கொண்டு சென்ற பொருள்களைத் திருப்பணிக்குச் செலவிட்டமையால் பாண்டியமன்னனால் தண்டிக்கப்பட்டார். இறைவன் தன் கருணைத்திறத்தால் பிட்டுக்கு மண் சுமந்து உண்மை உணர்த்தினார். பாண்டியன் தன் தவறுக்கு வருந்தினான். என்றாலும் மாணிக்கவாசகர் தன் அமைச்சர் பதவி துறந்து உத்தரகோசமங்கை முதலாகப் பல்வேறு தலங்களைப் போற்றிப்பாடி இறுதியில், தில்லையில் திருவாசகம் திருக்கோவையாரை அருளிச்செய்து தில்லையம்பலத்தில் கலந்தார். பதினாறாம் நூற்றாண்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் தோன்றியவர் பட்டினத்தார். இறைவனே மகன் வடிவில் குருவாக வந்து ''காதற்ற ஊசியும் வாராது கடை வழிக்கே'' எனக் கூறி நிலையாமை உணர்த்தியமையால் திருவருள் கிடைக்கப் பெற்றார். பின்னர் தன் ஞான அனுபவங்களைப் பாடிச் சிவத்தலம்தோறும் சென்று போற்றி இறுதியில் திருவொற்றியூரில் இறைமுக்தி பெற்றார். பட்டினத்தார் திருவாசகத்தையே தன் ஞான நூலாகக் கொண்டு மாணிக்கவாசகர் வழி நின்றே 'சிவஞானம்' பெற்றார் என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

### நிலையாமை

பட்டினத்தார் பாடல்களில் 'இளமை, உடல், செல்வம் இவையாவும் நிற்காது அழியும்' என்னும் நிலையாமைக் கருத்துக்கள் திருவாசக நெறியோடு ஒத்துச் செல்வதை அறிய முடிகிறது.

**''வெந்துவிழும் உடற்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்**
**கொந்துகுழல் கோல் வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்**
**பந்தம் அறுத்து எனைஆண்டு பரிசற என்துரிசும் அறுத்து**
**அந்தம் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே'' (அச்சப்பத்து – பா.6)**

என்னும் திருவாசகப் பாடலில் உடற்பிறவியின் இழிவும் இறைவன் தனக்கு அருளிய திறமும் குறித்து மாணிக்கவாசகர் வியந்து போற்றியுள்ளார். பட்டினத்தார் உடல்நிலையாமை பற்றிக் கூறும் போது,

**''முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு**
**பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதும் கண்டு பின்னும் இந்தப்**
**படிசார்ந்த வாழ்வை நினைப்பது அல்லால் பொன்னின் அம்பலவர்**
**அடிசார்ந்து நாம் உய்யவேண்டும் என்றே அறிவாரில்லையே'' (திருத்தில்லை-பா.8)**

எனப் பாடுகிறார். இப்பாடலில் 'வெந்து' எனும் திருவாசகச் சொல்லாட்சியை அப்படியே பட்டினத்தார் கையாண்டிருப்பதை அறியலாம்.

### அருள்பெரும் நாள் என்னாளோ?

மாணிக்கவாசகர் இறைவனிடம் அருள் வேண்டி இரந்து நிற்கும்படியாக பலபாடல்களில் விண்ணப்பிக்கிறார். சான்றாகத் திருச்சதகத்தில்,

**''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரைஆர் கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய போற்றி என்னும்**
**கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக் கண்டுகொள்ளே'' (பா.1)**

எனும் பாடலைக் குறிப்பிடலாம். இப்பாடற்கருத்தையும், பக்தி வேண்டும்திறத்தையும் பட்டினத்தார் பாடல்களில் காணலாம்.

**"நீறார்ந்தமேனி உரோமம் சிலிர்த்து உளம்நெக்கு நெக்குச்**
**சேறாய்க் கவிந்து கசிந்தே உருகி நின்சீரடிக்கே**
**மாறாத்தியானமுற்று ஆனந்தமேற்கொண்டு மார்பில் கண்ணீர்**
**ஆறாய்ப் பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தானே" (கயிலாயம்-பா.5)**

எனும் பாடலில் பட்டினத்தார் திருவாசகநெறி நின்று அருள்வேண்டிப் பாடிய திறத்தை ஒப்பிடலாம்.

**தற்சிறுமை கூறல்**

**"நமச்சிவாய என்று உன் அடிபணியாப் பேயன்" (செதிலாப்பத்து பா.7)** என மாணிக்கவாசகர் திருவடி போற்றாத் தன் சிறுமையைக் குறிப்பிடுகிறார். மேலும் அறிவுறுத்தல் பகுதியில்,

**"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு**
**ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே" (10.1-2)**

எனும் அடிகளில் உலகியல் வாழ்வை விரும்பித் திரிந்து இறைவனை போற்றாதத் தன் சிறுமையைக் குறிப்பிடுகிறார். இதே ஞானத்தேடலை பட்டினத்தார் தன் பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

**"வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்**
**தாழாமல் தாழ்ந்தேன்டி சற்றும் குறையாமல்" (அருள்புலம்பல் - 67)**
**"பக்தி அறியாமல் பாழில் கவிழ்ந்தேன்டி" (மேலது.48)**

முதலான பாடலடிகளில் பட்டினத்தாரின் தற்சிறுமை குறிப்புகளைக் காணலாம்.

**இருவருக்கும் இறைவனே குருவாகி வருதல்**

இருபெரும் சைவ ஞானிகளுக்கும் சிவபெருமானே குருவாகி வந்து 'சிவஞானம்' அருளிய அனுபவத்தை இருவரும் தம்தம் பாடல்களில் குறித்துள்ளமை ஒப்புநோக்கத் தக்கது.

திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் இறைவன் ஞானஆசிரியனாக வந்து தனக்கு அருளிய திறத்தை மாணிக்கவாசகர் பல்வேறு பாடல்களில் அறியக்காட்டியுள்ளார். இதனை,

**"குருந்தின் கீழ் அன்று இருந்த கொள்கையும்" (போற்றி திருஅகவல்.61)**
**"அருபரத்து ஒருவன் அவனியில் வந்து**
**குருபரனாகி அருளிய பெருமையும்" (போற்றித் திருஅகவல்.75-76)**

முதலான பாடலடிகளில் அறியலாம். இதேபோன்று திருவாசகத்தில் உள்ள திருக்கழுக்குன்ற பதிகம் முழுவதிலும் இறைவன் குருவாகி வந்த காட்சியை வியந்து போற்றுகிறார் மாணிக்கவாசகர். பட்டினத்தாரும் சிவபெருமானே தன் மகனாகவந்து சிவஞானம் உணர்த்திய பெருமையை பல்வேறு இடங்களில் வியந்துபோற்றியுள்ளார். சான்றாக,

**"குருவாகி வந்தானோ? குலம் அறுக்க வந்தானோ?**
**உருவாகி வந்தானோ? உரு அழிக்க வந்தானோ" (அருள்புலம்பல்-13)**
**"ஒப்பும் உவமையும் அற்ற ஓதஅரிதாய பொருள்**
**இப்பிறவியில் குருவே என்னவந்தோன் தாள்வாழி" (அருள்புலம்பல்-116)**
**"ஆண்டகுருவின் அருளை மிகப்போற்றி" (நெஞ்சோடு புலம்பல்-25)**

முதலான பாடலடிகளைக் குறிப்பிடலாம். குலம் தழைக்கவே குழந்தை எனக்கருதும் மனித அறியாமைக்கு எதிராகக் குலம் அறுக்கவே (பந்தம்) தனக்கு மகனாக இறைவன் தோன்றிய சிறப்பையும் பட்டினத்தார் பதிவு செய்துள்ளமை அறியத் தக்கதாகும்.

**பிறப்பின் வகை**

திருவாசகத்தின் முதல்பகுதியான சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் தான் பெற்ற பிறப்பின் வகைகளை 'புல்' முதலாக 'தேவர்' ஈறாக வரிசைப்படுத்தியுள்ளார். இதனை,

**"புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகி**
**பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி**
**கல்லாய் மனிதராகிப் பேயாய் கணங்களாய்**
**வல்லசுரர்ஆகி முனிவராய் தேவராய்**
**செல்லா நின்ற இத்தாவரச் சங்கமத்துள்**
**எல்லாப்பிறப்பும் பிறந்து இளைத்தேன்" (சிவபுராணம் 26-31)**

எனும் அடிகளில் அறியலாம். பட்டினத்தாரும் மாணிக்கவாசகரை அடியொற்றி சிறிதும் மாறுபடாமல் 'புல்' முதலாகத் 'தேவர்' ஈறாகப் பல்வேறு பிறவிகளைத் தான் பெற்று வருந்தியதாகக் கூறியுள்ளார். இக்கருத்தை,

**"புல்லாகிப் பூடாய்ப் புலந்தநாள் போதாதோ?**
**கல்லாய் மரமாய் கழிந்தநாள் போதாதோ?**
**கீரியாய் கீடமாய்க் கெட்டநாள் போதாதோ?**
**நரியாய் ஊர்வனவாய் நின்றநாள் போதாதோ?**
**பூதமொடு தேவருமாய்ப் போன நாள் போதாதோ?" (முதல்வன் முறையீடு 21-25)**

எனும் பாடலடிகளில் ஒப்பிட்டு உணரலாம்.

### அடியார் பெருமை போற்றுதல்

அடியார்களின் பக்தித்திறத்தைச் சுட்டிக்காட்டி 'இத்தகு பக்தி வைராக்கியம் தன்னிடம் இல்லை' என மாணிக்கவாசகர் வருந்திக் கூறியுள்ளார்.

**"கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்**
**என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி**
**வண்ணப்பணித்து என்னை வா என்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பி" (திருக்கோத்தும்பி – பா.3)**

எனும் பாடல் வழி ஒப்பிட்டு அறிய முடிகிறது.

### உலகப் பற்றை வெறுத்தல்

இருபெரும் சைவ ஞானிகளும் உலகியல் பற்றை வெறுத்து இறைப்பற்ற வேண்டிப் பாடிய பெருமையுடையவர்கள்.

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்று விடற்கு" (குறள் - 350)**

என்பார் வள்ளுவர்.

**"எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய**
**பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிபிரான்"** (திருப்பூவல்லி-பா.2)

என்னும் திருவாசகப் பாடலடிகளில் மேலான உறவாகிய தாய்தந்தை மற்றும் சுற்றம் ஆகிய பந்தத்தை அறுத்து நிலையில்லா உலக உறவை நீக்கி அருளிய திறத்தை வியக்கிறார். இதே போன்று **"உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன் தேர் வேண்டேன் கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும் குற்றாலத்து அமைந்துரையும் கூத்தா உன்குரை கழற்கே கற்றாவின் மனம்போல கசிந்துருக வேண்டுவனே" (திருப்புலம்பல் பா.3)** என்னும் பாடலில் மாணிக்கவாசகர் உலகப் பற்று நீங்கித் திருவடிப்பற்றே தான் கொள்ள வேண்டும் என விண்ணப்பிக்கிறார். பட்டினத்தாரும் மேற்கண்ட திருவாசகப் பாடலை அடியொற்றி **"உற்றார் ஆர்? பெற்றார் ஆர் உடன்பிறப்பு ஆர் பிள்ளைகள் ஆர் மற்றார் இருந்தால் என்? மாளும் போது உதவுவரோ கற்றா இழந்த இளம் கன்றது போல உருகிச் சிற்றாகிச் சிற்றினம் சேர்ந்தனையே நெஞ்சமே" (நெஞ்சொடுபுலத்தல்-பா.13)** எனப் பாடியுள்ளார். இப்பாடலில் உற்றாரை வேண்டாத பொருண்மை அப்படியே திருவாசகத்தோடு ஒத்திருப்பதை அறியலாம் . இப்பாடலில் கற்றா எனும் திருவாசகச் சொல்லாட்சியை அப்படியே பட்டினத்தாரும் கையாண்டிருப்பதை ஒப்பிட்டு அறியலாம்.

**சிற்றின்ப வெறுப்பு**

**“தையலார் எனும் சுழித்தலைப்பட்டு நான்தலை தடுமாறாமே பொய்யெல்லாம் விட திருவருள்தந்து தன் பொன்னடிஇணை காட்டி” (அற்பிதப்பத்து பா.1)**

**“பஞ்சாய அடிமடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு நெஞ்சாய துயர் கூற நிற்பேன் உன் அருள்பெற்றேன்” (அச்சோபதிகம்-பா.4)**

**‘‘செந்துவர் வாய்மடவார் இடர்ஆனவை சிந்திடும் ஆகாதே” (திருப்படைஆட்சி-பா.3)**

முதலான பாடலடிகளில் சிற்றின்ப வாழ்வில்இருந்து இறைவன் தன்னைக் காத்து ஆட்கொண்டதாக மாணிக்கவாசகர் பாடியுள்ளார். பெண்ணை ‘நீர்ச்சுழி’ என உருவகப்படுத்தியதைத் தவிர வேறு கடுமையைத் திருவாசகத்தில் காணஇயலவில்லை. பட்டினத்தார் சிற்றின்ப வெறுப்புணர்ச்சியைத் தீவிரமாக வெளிப்படுத்தியுள்ளார்.

**“பெண்ணாகி வந்த மாயப் பிசாசம்” (திருவேகம்பமாலை-23)**

எனும் அடியில் பெண்மையை மாயப் பிசாசு எனப் பட்டினத்தார் உருவகப்படுத்தியுள்ளார்.

**“காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டி என் கண்ணெதிரே**
**மாதென்று சொல்லி வரும் மாயைதனை மறலிவிட்ட**
**தூதென்று எண்ணாமல் சுகமென்று நாடும் இத்துற்புத்தியை**
**ஏதென்று எடுத்துரைப்பேன் இறைவா கச்சி ஏகம்பனே” (திருவேகம்பமாலை-பா.23)**

எனும் பாடலில் பெண்ணை ‘மாயை’ என்றும் ‘எமன்விட்ட தூது’ என்றும் உருவகப்படுத்தியுள்ளார் பட்டினத்தார். சிற்றின்ப வெறுப்புணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ள பாடல்களில் இத்தகு கடுமைப்போக்கினைப்பட்டினத்தார் கையாண்டுள்ளார்.

**உவமை ஒப்புமை**

பக்தி உணர்ச்சிக்கும் உலகியல் பற்றற்ற தன்மைக்கும் வழக்கில் அமைந்த அழகிய எளிய உவமைகளை மாணிக்கவாசகர் கையாண்டுள்ளார். மாணிக்கவாசகரைப் பின்பற்றியே பட்டினத்தாரின் உவமைகளும் அமைந்துள்ளன.

**எறும்பிடை நாங்கூழ் எனப் புலனால் அரிப்புண்டு (நீத்தல் விண்ணப்பம் பா.25)**

என்பார் மாணிக்கவாசகர்.

**‘‘தூண்டில் அகப்பட்டுத் துடி கெண்டை ஆனேனே” (நெஞ்சொடுபுலத்தல்-25)** என்பார் பட்டினத்தார்.

**“செழிகின்ற தீப்புகு விட்டிலின்” (நீத்தல் விண்ணப்பம்-4)**

**“இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து” (நீத்தல் விண்ணப்பம் 9)**

எனும் அடிகளில் விரும்பி தீயில்விழும் விட்டில்பூச்சி, இருபக்கமும் நெருப்புடைய குழல் பகுதியில் தவிக்கும் எறும்பு முதலான உயிரினங்களை உவமையாக்கியுள்ளார் மாணிக்கவாசகர்.

பட்டினத்தார் **‘‘சர்பத்தின் வாயில் தவளைபோல் ஆனேனே (நெஞ்சொடுபுலத்தல்-12) சிலந்தியிடை நூல்போல் (பூரணமாலை-42)”** எனும் அடிகளில் பாம்பின் வாயில் அகப்பட்டுள்ள தவளை, நூலில் நின்று ஆடும் சிலந்தி, ஆகிய உயிரினங்களை உவமையாக்கி உள்ளார்.

தன் சிறுமையைக் குறிக்கும் வண்ணம் **‘‘ஊர் நாயின்கடை ஆனேன்” (அனுபவசுத்தி-6)**

என்பார் மாணிக்கவாசகர். கேட்பார் அற்று ஊரில் எந்த நோக்கமும் இன்றிச் சுற்றித்திரியும் நாயினைத் தன் சிறுமைக்கு உவமையாக்கிய இத்திறத்தை அப்படியே பட்டினத்தடிகளும் தம்பாடலில் வெளிப்படுத்தியுள்ளார். **“அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே” (நெஞ்சோடுபுலத்தல்-பா.1)** எனும் அடிகளில் கடைத்தெருவில் அலைந்து திரியும் நாயினைத்தன் சிறுமைக்கு உவமையாக்கியுள்ளார் பட்டினத்தார். பட்டினத்தார் பாடல்களில் அமைந்துள்ள உவமைகள் பெரும்பான்மை திருவாசகத்தைப் பின்பற்றியே அமைந்துள்ளன. திருவாசக நெறியைத் தன்னுடைய இலக்கியக் கொள்கைக்கும் பக்திநெறிக்கும் பாதையாக அமைத்துக் கொண்டார் பட்டினத்தார் என்னும் கருத்தாக்கத்திற்கு உவமைகள் சான்றுகளாகின்றன.

**வினையறுத்த பெருமான்**

**“வினையைப் பொடியாக்கி” (ஆனந்தப்பரவசம் பா.9)**

**“வினையில் கிடந்தேனைப் புகுந்து நின்று” (சுட்டறுத்தல் பா.1)**

**“முன்னை என்னுடை வல்வினை போயிட**
**முக்கண் அதுஉடை எந்தை” (அதிசயப்பத்து – பா.3)**

முதலான பாடலடிகளில் இறைவன் தன் வல்வினைகளைப் போக்கித் தனக்கு அருள்செய்தான் என்பதாக மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். பட்டினத்தாரும் இக்கருத்தை அடியொற்றி இறைவன் தன்வினைகளைப் போக்கியத் திறத்தைக் கூறியுள்ளார். இதனை,

**‘‘முன்னை வினையெல்லாம் முழுதும் அறுத்தான்டி” (அருள்புலம்பல் - 21)**

**“என்னையே நான் அறிய இருவினையும் ஈடழித்துத்**
**தன்னையறியத் தலம் எனக்குச் சொன்னான்டி” (மேலது.22)** முதலான பாடலடிகளில் ஒப்பிட்டு அறியலாம்.

**சொல்லாட்சி ஒப்புமை**

பட்டினத்தார் திருவாசகத்தில் மிகுந்த பற்றுடையவராக விளங்கியுள்ளார். மாணிக்கவாசகரின் பக்தி நெறியைத் தன்நெறியாகக் கொண்டு சிவமுக்தி பெற்றவர் என்பதை இவர்தம் பாடற்பொருண்மை வழி அறியலாம். மேலும் பட்டினத்தார் பாடல்களை நுணுகிக் கண்டால் திருவாசகத் தொடர்களையும் சொற்களையும் கூட மாறுபாடு இன்றி தன் பாடல்களில் கையாண்டுள்ளமையை ஒப்பிட்டு அறியலாம்.

**“பண்டாய நான்மறையும் பால்அணுகா மால் அயனும்” (பண்டாயநான்மறை.பா.1)** எனும் திருவாசகத் தொடரை,

**‘‘பண்டாய நான்மறைகள் பாடும் பரிசலவோ” (அருள்புலம்பல்-36)**

எனும் பட்டினத்தார் பாடலடியில் காணமுடிகிறது. இதேபோன்று,

**“தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி” (போற்றித் திருஅகவல்-42)** என்பது திருவாசகத் தொடர். பட்டினத்தார் தன் பாடலில்,

**‘‘ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு” (திருக்களத்திபா.20.1)** என்பார்.

**முடிவுரை**

மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசக நெறியே பட்டினத்தார் பின்பற்றிய ஞானநெறி என்பதை இவர்தம் பாடற்பொருண்மை வழி அறியமுடிகிறது. உலகவாழ்வில் தோன்றிய வெறுப்புணர்ச்சி, தற்சிறுமைகூறல், நிலையாமை, இறைவனின் அருள்பெற விழைதல், இறைவனின் கருணைத்திறம் வியத்தல், உவமை கூறல் ஆகியன குறித்து மாணிக்கவாசகர் பாடிய தடம் பற்றியே பட்டினத்தாரின் வாழ்வும் வாக்கும் அமைந்திருப்பதை ஒப்பிட்டுக்கண்டால் விளங்கிக்கொள்ள முடியும்.